# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, THANJAVUR

# DEPOSITION OF WITNESS

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | SC. 348/2022 | Village | : | |
| Prosecution witness | : | PW-7 | Taluk | : | |
| Name | : | திரு.செந்தில்குமார் | Occupation | : | |
| Father Name | : | திரு. புண்ணியமூர்த்தி | Age | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 27.10.2025**

All accused present.

அரசு தரப்பில் முதல் விசாரணை:

நான் புரசகுடி கீழத்தெருவில் வசித்து வருகிறேன். விவசாய கூலி வேலை செய்துவருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. போலிஸார் என்னை விசாரிக்கவில்லை.

அரசுதரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்குவிசாரணைக்கு அனுமதி கோரியதன் பேரில் அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

எனக்கு மஹாராஜாபுரம் திருச்சடைவிலந்தை காளியம்மன்கோவில் தெருவில் வசிக்கும் சிங்கபெருமாள் என்பவரை தெரியும். அய்யம்பேட்டை மதகடைஅருகே டாஸ்மார்க் பார் ஒன்று உள்ளது என்றால் சரிதான். 6.4.2022 அன்று 7மணிக்கு நானும் சிங்கபெருமாளும் நின்றுகொண்டிருந்தோம் என்றும் ஆஜர் எதிரிகள் வந்தார்கள் என்றால் நாங்கள் சரக்கு அடித்து கொண்டிருந்தோம் தெரியாது. நான் போலிஸார் விசாரிக்கும்போது ஆஜர் எதிரிகள் நெடுந்தெருவில் வீட்டிற்கு போய் கொள்ளைஅடிக்கவேண்டும் என்று பேசிகொண்ட விபரம் நான் என் காதில் கேட்டேன் என்று போலிஸார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு பயந்து கொண்டு போலிஸார் விசாரிக்கவில்லை என்று மேற்கண்டவாறு நான் சொல்லவில்லை என்றும் 4வது எதிரி டேவிட்டை பெயர் சொன்னேன் என்றும் சொன்னால் சரியல்ல. பின்னிட்டு 7.4.2022 அன்று அப்துல் ரசாக்கு கொலை செய்யபட்டு இறந்துவிட்டதை அறிந்தேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது ஆஜர் எதிரிகளுக்கு

பயந்துகொண்டு அவர்கள் வீட்டருகில் வசிப்பதால் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**(ஒம்/- ப ,நாகராஜன்)**
**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தஞ்சாவூர்.**